பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 10 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு அல்ஜீரியா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.
2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்
3. மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
4. தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்றும் நாளையும் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி –டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று இங்கிலாந்து - வெஸ்ட் இண்டிஸ் அணிகள் மோதுகின்றன.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு அல்ஜீரியா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மூன்று நாடுகள் பயணத்தின் ஒரு பகுதியாக அல்ஜீரியா சென்றுள்ள திருமதி திரௌபதி முர்முவுக்கு அந்நாட்டில் உள்ள சிதி **Abdellah** அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அரசியல் அறிவியல் துறையில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அந்நாட்டின் உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கமல் **Battari** கலந்து கொண்டு டாக்டர் பட்டத்தை திருமதி திரௌபதி முர்முவுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், தமக்கு வழங்கப்பட்ட இந்த டாக்டர் பட்டம் இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அமைதி மற்றும் வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வரும் ஒரு நாட்டிற்கு கிடைத்த அங்கீகாரமாகவே இதனை தாம் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

கல்வி அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் என்றும், மக்களுக்கு இடையேயான ஏற்றத்தாழவுகளை முற்றிலுமாக களையும் திறன் படைத்தது என்றும் அவர் கூறினார்.

இந்திய – அல்ஜீரிய மக்களை இணைப்பதில் இருநாட்டு இளைஞர்களும் பாலமாக திகழ வேண்டுமென்றும், சமூக உறவுகளை மேம்படுத்த வேண்டுமென்றும் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நேர்மையாகவும், ஆக்கப்பூர்வமான பணிகளுக்காகவும் பயன்படுத்த வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் மற்றும் உலக தொலைத்தொடர்பு தர நிர்ணய அமைப்பு கூட்டத்தில் உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு தொடர்பான உலகளாவிய விவாதங்களில் பாதுகாப்பு, இறையாண்மை, சமத்துவம் உள்ளிட்டவற்றை மையமாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய கட்டமைப்பு ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் குறிததும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியா தலைமையேற்று நடத்திய ஜி-20 உச்சி மாநாட்டிலும் இந்த கோரிக்கை முன் வைக்கப்பட்டதாக கூறிய பிரதமர். உலகளாவிய நிர்வாக கட்டமைப்பின் அவசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக தரத்திற்கு இணையான தொலைத் தொடர்பு கட்டமைப்பை இந்தியா உருவாக்கி உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

தொலைத்தொடர்பு மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பத்தை கொண்டு வருவதில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் 120 கோடி செல்போன் பயன்பாட்டாளர்களும், 95 கோடி இணையதள சேவை பயன்பாட்டளார்களும் உள்ளதாக அவர் கூறினார்.

40 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிகர்நிலை பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலும் மின்னணு தகவல் தொடர்பு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு இந்தியா முன்னுரிமை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மிகக்குறைந்த செலவில் மின்னணு தகவல் தொடர்பு உபகரணங்கள் சாதாரண மக்களுக்கும் கிடைப்பதோடு நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் மின்னணு கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐந்து-ஜி தொழில்நுட்பத்தை கொண்டு வருவதில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது என்று குறிப்பிட்ட திரு நரேந்திரமோடி, ஆறு-ஜி தொழில்நுட்பத்தை கொண்டு வருவதற்கும் மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறினார்.

[]<<<>>>[]

தொழில் மற்றும் முதலீட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் சக்தியாக இந்திய – அமெரிக்க நட்புறவு அமைப்பு திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்த அமைப்பின் தலைவர் திரு ஜான் டி சேம்பர் மற்றும் உறுப்பினர்களுடன் திருமதி நிர்மலா சீதாராமன், கலந்துரையாடினார்.

இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு, புதிய முதலீட்டுக்கான வாய்ப்புகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வீட்டுவசதி, காப்பீட்டுத் துறைகளில் கொண்டுவரப்பட்டுள்ள முதலீட்டு வாய்ப்புகள் உள்ளிட்டவை குறித்து அவர் கலந்துரையாடினார்.

வர்த்தகத்துக்கான முக்கிய மையமாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு முனைப்புடன் செய்து வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களின் சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டள்ளன.

புதுதில்லியில் இன்று பிற்பகல் செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறும் என்று அறிவித்தார்.

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 13 மற்றும் 20-ஆம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும் என்று தெரிவித்தார்.

இந்த இரண்டு மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 23-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 13-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல மாநிலங்களில் காலியாக உள்ள 47 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் அடுத்த மாதம் 13-ஆம் தேதி நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் அறிவித்தார்.

உத்தராகண்ட் மாநிலத்தில் காலியாக உள்ள ஒரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும், மகாராஷ்டிரா மாநிலத்தில் **Nanded** மக்களவைத் தொகுதிக்கும் அடுத்த மாதம் 20-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

23-வது ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் சென்றடைந்தார்.

பாகிஸ்தானில் தலைமையில் நாளை தொடங்கும் இந்த உச்சிமாநாட்டில் ஷாங்காய் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

உறுப்பு நாடுகளின் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கோரிக்கைகள் குறித்து ஆய்வு செய்து முடிவெடுக்கும் நோக்கில் ஆண்டுதோறும் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு நடைபெற்று வருகிறது.

இந்த அமைப்பில் துடிப்புடன் செயல்பட்டு வரும் இந்தியா, ஷாங்காய் கட்டமைப்பை மேம்படுத்த பல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

ஷாங்காய் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டுமே இஸ்லாமாபாத் செல்வதாகவும், பாகிஸ்தானுடன் எவ்வித இருதரப்பு பேச்சுக்களும் நடத்தப்பட மாட்டாது என்றும் திரு ஜெய்சங்சர் ஏற்கனவே தெளிவுபடுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இது அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும், இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வடதமிழகம் - தெற்கு ஆந்திர கடல் பகுதியை நோக்கி நகரும் என்று அவர் கூறினார்.

இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் இன்றும் நாளையும் அதிகனமழை பெய்யும் என்று கூறினார். சென்னையில் இன்று மாலை முதல் மிக அதி கனமழை பெய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

வியாழக்கிழமை முதல் மழை படிப்படியாக குறைய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

குமரி கடல், மன்னார்வளைகுடா உள்ளிட்ட தமிழக கடலோரப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் திரு பாலச்சந்திரன் அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

இதனிடையே சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் நள்ளிரவு முதல் விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் அத்தியாவசிய சேவைகள் தவிர இதர அலுவலகங்களுக்கு நாளை பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை, யானைக்கவுனி. பேசின் பிரிட்ஜ் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

துப்புரவு பணியாளர்களுடனும் கலந்துரையாடிய அவர். அவர்களை ஊக்கப்படுத்தினார்.

மழைநீர் தேங்கும் பகுதிகளில் உடனுக்குடன் அவற்றை அப்புறப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

சென்னை எழிலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு ஆய்வு மையத்தை நேரில் ஆய்வு செய்த துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் தொள்ளாயிரத்து 31 நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னை ராயப்பேட்டை, அரும்பாக்கம், வேளச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளம் பாதித்த பகுதிகளை அவர் நேரில் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி —டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இங்கிலாந்து - வெஸ்ட் இண்டிஸ் அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

**[]<<<>>>[]**

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் கலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மாஸ்டர்ஸ் மலேசியா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சங்கர் முத்துசாமி சுப்ரமணியன், குல்சன்குமார், அபிஷேக், ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் தோல்வியடைந்தார்.

**[]<<<>>>[]**